# 58

# "அல்லேலூயா!" பல்லவி

## (19:1-6)

ஹேன்டெல் என்ற இசைக்கலைஞரின் *மேசியா* என்ற இசைத் தொகுப்பில் உள்ள "அல்லேலூயா பல்லவி" என்ற பாடலானது உலகில் மிகவும் நன்கு அறியப்பட்ட இசைத் தொகுப்புகளில் ஒன்றாக உள்ளது.[1] அந்தப் பல்லவியின் வார்த்தைகள் எளியவைகளாக, "அல்லேலூயா" என்ற வார்த்தையைப் பிரதானமாக, மற்றும் பின்வரும் ஒருசில சொற்றொடர்களைத் திரும்பத்திரும்பக் கூறுபவையாக உள்ளன: "ஏனெனில் ஆண்டவர் சர்வவல்லவராய் ஆளுகை செய்கிறார்"; "அவர் என்றென்றைக்கும், என்றென்றைக்கும், என்றென்றைக்கும் ஆளுகை செய்வார்"; "ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்!" இருந்தபோதிலும், இந்தப் பாடல் நன்கு பாடப்படும்போது, அதைக் கவனிக்கும் எந்த ஒரு நபருக்குள்ளும் ஒரு மெய்சிலிர்ப்பை இது அனுப்ப முடியும். ஹேன்டெல் அவர்கள் இதை இசையமைத்தபோது, தாம் பரலோகத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதாக உணர்ந்தேன் என்று கூறினார்.[2]

பலர் இந்தப் பல்லவியை அறிவார்கள், ஆனால் ஹேன்டெலின் இந்த மிகச்சிறந்த படைப்பிற்கு ஏறக்குறைய நிச்சயமாகவே, வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம்தான் ஏவுதலானதாயிருந்தது என்பதைப் பெரும்பான்மையானவர்கள் அறிவதில்லை. இந்த அதிகாரம், "இவைகளுக்குப் பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா! இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது, ... என்றார்கள்" (வசனம் 1). முதல் ஆறு வசனங்களில், மீண்டும் மீண்டும் சந்தோஷம் நிறைந்த கூவுதல் ஒலிக்கிறது: "அல்லேலூயா!" (வசனங்கள் 1, 3, 4, 6). 6ம் வசனத்தில், பரலோக மற்றும் பூலோக பாடற்குழுவினர் இணைந்து, "அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்" என்று பாடுகின்றனர். கடைசியில் நாம் 16ம் வசனத்தில், "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் ... எழுதப்பட்டிருந்தது" என்று வாசிக்கின்றோம்.[3]

ஹேன்டெல் என்பவரின் பல்லவியிலும் வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6ரிலும் "அல்லேலூயா" என்பது திறவுகோல் வார்த்தையாக உள்ளது. "அல்லேலூயா" என்பது, முதலில் கிரேக்க மொழியிலும் பின்பு ஆங்கிலத்திலும் [அதன்பின்பு தமிழிலும்] ஒலிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையாகும்.[4] இது "துதி" என்பதற்கான எபிரெய வார்த்தையை (halah) தேவனுடைய பரிசுத்த பெயருடன் (*Jah*, இது "Jehovah" என்பதன் சுருக்க

*வடிவமாகும்) இணைத்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையாகும். இது "யெகோவாவைத் துதியுங்கள்" என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது - அல்லது இது பொதுவாக மொழிபெயர்க்கப்படுகிறபடி, "ஆண்டவரைத் துதியுங்கள்" என்ற அர்த்தம் கொண்டுள்ளது.[5]*

*பெரும்பாலான வேதாகமங்களில் வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6ல் மாத்திரமே "அல்லேலூயா" என்ற வார்த்தை காணப்படுகிறது என்பதை அறிதலானது சிலருக்கு வியப்பளிக்கும். இந்தச் சொற்றொடரானது, வேதவசனங்கள் முழுவதிலும் காணப்படுகிறது என்று நாம் யூகிக்கும் அளவுக்கு இது நமது மதரீதியான சொற்றொடராக்கத்தில் மிகவும் நிலைகொண்டுள்ளது - ஆனால் இது அவ்வாறு காணப்படுவதில்லை. இந்த எபிரெய வார்த்தையானது சங்கீதங்களின் புத்தகத்தில் இருபத்து நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இது எவ்வித மாற்றமும் இன்றி, ''கர்த்தரைத் துதியுங்கள்!'' அல்லது இதற்குச் சமமான வார்த்தைகளாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[6] வழக்கத்தில் நிலைபெற்றுள்ள ஆங்கில வேதாகமங்களில், ''அல்லேலூயா'' என்ற வார்த்தையானது நான்கு முறைகள் மாத்திரமே காணப்படுகிறது - இவையாவும் வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6ல்தான் உள்ளன. இவ்விடத்தில் நாம் வானமண்டல ''அல்லேலூயா!'' பல்லவியைக் கொண்டுள்ளோம்.*

*நமது படிப்புகளில் நாம் துதிவசனப்பகுதிகள் பலவற்றை எதிர்கொண்டுள்ளோம்; ஆனுல் 19ம் அதிகாரத்தில், தேவனைத் துதித்தல் என்பது அதன் உச்சத்தை அடைகிறது. துதி என்பது ஆராதனையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது என்று நான் முன்னதாகக் குறிப்பிட்டுள்ளேன் - மற்றும் இதைப் பொறுத்தமட்டில் நான் எனது தனிப்பட்ட வகையில் போதுமற்ற நிலையை உணருகின்றேன். ஆகையால் இந்த ஆண்டின் முற்பகுதியில், தேவனைத் துதித்தல் பற்றி வேதாகமத்தில் உள்ள வசனப்பகுதிகளின்மீதான ஒரு படிப்பொன்றை நான் மேற்கொண்டேன். அடிப்படையில் நாம் இரண்டு விஷயங்களுக்காக அவரைத் துதிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம் என்று நான் முடிவு செய்தேன்: அவர் செய்துள்ளவற்றிற்காக, மற்றும் அவர் யாராக இருக்கின்றார் என்பதற்காக. சங்கீதம் 150:2 வசனமானது இவ்விரண்டு ஆய்வுக்கருத்துக்களையும் கொண்டுள்ளது; "அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக [அவர் செய்துள்ளவற்றிற்காக] அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக [அவர் யாராக இருக்கின்றாரோ, அதற்காக] அவரைத் துதியுங்கள்." வெளிப்படுத்தின விசேஷத்தின் ''அல்லேலூயா!'' பல்லவியும் இவ்விரண்டு தலைப்புக்களின்மீது கவனம் குவிக்கிறது.*

## தேவன் செய்துள்ளவற்றிற்காக அவரை துதித்தல் *(19:1-4)*

*19ம் அதிகாரத்தின் முதல் வசனங்கள், 18ம் அதிகாரத்தின்*

கட்டளைக்குப் பதில்செயலாக உள்ளன: ''பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்து [அதாவது பாபிலோனைக் குறித்து] களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே!" (18:20). 18ம் அதிகாரத்தின் விம்மல் நிறைந்த அழுகையும் அமைதியும், 19ம் அதிகாரத்தின் பொங்கியெழும் பாடலினால் பின்தொடரப்பட்டன.

இவ்வதிகாரம், "இவைகளுக்குப் பின்பு ... நான் கேட்டேன்" (வசனம் 1அ) என்று தொடங்குகிறது. ''இவைகள்'' என்பது ரோமாபுரியின் வீழ்ச்சியைச் சித்தரிக்கும் காட்சிகளைக் குறிக்கிறது. 19ம் அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்கள், 17:1ல் தொடங்கிய, பாபிலோனின் வீழ்ச்சி பற்றிய நீண்ட வசனப்பகுதியை முடித்து வைக்கின்றன. 19:1அவில் நாம், ''... பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன்" என்று வாசிக்கின்றோம். 5:11ல் நாம், தூதர்களின் திரளான கூட்டம் பற்றியும், 7:9ல் மீட்கப்பட்டவர்களின் திரளான கூட்டம் பற்றியும் வாசித்தோம். ஒருவேளை இவ்விரு குழுக்களும் தங்கள் குரல்களை ஒன்றிணைத்திருக்கலாம்.[7]

பரலோகப் பாடற்குழுவினர், ''அல்லேலூயா, இரட்சணியமும்[8] மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது" என்று பாடினர் (வசனம் 1இ).[9] ரோமாபுரியானது, மகிமையும் வல்லமையும் தனிச்சிறந்த வகையில், தனக்கே உரியது என்று நம்பியிருந்தது; அது, ராயன்தான் உலகத்தின் இரட்சகன் என்று வலியுறுத்தியது - ஆனால் அது தவறானதாக இருந்தது. யெகோவா தேவன், இரட்சிப்பு, மகிமை மற்றும் வல்லமை ஆகியவற்றிற்குத் தனிப்பட்ட உரிமைகளைக் கொண்டிருந்தார். வில்லியம் பார்க்ளே என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> தேவனுடைய மாபெரும் இந்த மூன்று பண்புகள் ஒவ்வொன்றும் தத்தனது சொந்த பதில்செயலை மனிதருடைய இருதயத்தில் எழுப்ப வேண்டும். தேவனுடைய இரட்சிப்பு என்பது மனிதனின் நன்றியுணர்வை எழுப்பவேண்டும், தேவனுடைய மகிமை என்பது மனிதனுடைய பயபக்தியை எழுப்ப வேண்டும்; தேவனுடைய வல்லமை என்பது ... மனிதனுடைய நம்பிக்கையை ... எழுப்ப வேண்டும். நன்றியுணர்வு, பயபக்தி, நம்பிக்கை - இவைகள் உண்மையான துதியில் அடங்கும் கூறுகளாக இருக்கின்றன.[10]

பாடகர்கள் இவ்வளவு மேன்மையான சொற்றொடர்களைக் கொண்டு தேவனைப் பற்றிப் பேசியது ஏன்? ''(ஏனென்றால்) அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்" (வசனம் 2அ).[11] நமது நியாயத்தீர்ப்புகள் எப்போதுமே தவறானவைகளாய் இருக்கின்றன, ஆனால் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் எப்போதும் சத்தியமும் நீதியுமானவை களாய் இருக்கின்றன.

> பின்வரும் மூன்று காரணங்களுக்காகத் தேவன் மாத்திரமே நியாயத்தீர்ப்பில் பூரணப்பட்டவராக இருக்கின்றார்: முதலாவது,

*அவர் மாத்திரமே, எந்த மனிதனுக்குள்ளும் இருக்கக்கூடிய உள்ளான சிந்தனைகளையும் விருப்பங்களையும் காண முடியும். இரண்டாவது, அவர் மாத்திரமே, தப்பெண்ணம் எதுவும் இன்றி நியாயந்தீர்க்கக் கூடிய தூய்மைத்தன்மையைக் கொண்டுள்ளார். மூன்றாவது, அவர் மாத்திரமே சரியான நியாயத்தீர்ப்பைக் கண்டறியக் கூடிய ஞானத்தையும் அதை நடைமுறைப்படுத்தக்கூடிய வல்லமையையும் கொண்டுள்ளார்.*[12]

*பின்பு இந்தப் பாடல், பொதுவான சத்தியத்தில் இருந்து குறிப்பான - ஒரு குறிப்பான சத்தியம் மற்றும் நீதியான நியாயத்தீர்ப்புக்குத் திரும்பிற்று:*

*"தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு [அதாவது, ரோமாபுரி நகருக்கு*[13]*] அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்." மறுபடியும் அவர்கள், "அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்"*[14] *(வசனங்கள் 2, 3).*

*ரோமாபுரியானது, ''பழங்கால சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் துன்மார்க்கத்தை பொழிந்த மையமாயிருந்தது"; அது, "மனிதனின் இழிகுண சிந்தையில் தோற்றுவிக்கப்பட்ட பேய்த்தனமான யுக்திகள் யாவும் (வழிந்தோடும்) மையமாக இருந்தது.''*[15] *அதனுடைய பாவங்கள் ''வானபரியந்தம் எட்டினது'' (18:5). இவ்விதமாக, கடைசியில் அது தேவனால் "நினைவுகூரப்பட்டது" (16:19; 18:5).*

*ஹேன்டெல் என்பவரின் மேசியா என்ற பாடலுக்கு நன்கு பழக்கப்பட்டவர்கள், அவரது ''அல்லேலூயா பல்லவி'' மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6ல் காணப்படும் அல்லேலூயா பல்லவி ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நேரெதிர்த் தன்மையைக் காண்பார்கள். ஹேன்டெலின் மகிழ்வு நிறைந்த பணியானது, இயேசுவின் மூலம் தேவனுடைய திட்டத்தின் நிறைவேற்றத்தின் மீது இருந்தது: அது இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் மற்றும் மரணத்தின்மீது வெற்றிக்கொண்டாட்டம் ஆகியவற்றின்மீது கவனம் குவித்தது. இதற்கு மறுபுறத்தில், வெளிப்படுத்தின விசேஷம் 19ன் முதல் பாகம், தேவனுடைய கடுமையான, தணியாத கோபத்தைப் பாராட்டுவதாகக் காணப்படுகிறது. ஒரு ''அல்லேலூயா பல்லவி'' வாழ்வு மற்றும் உண்மை நிலை ஆகியவற்றின்மீது கவனம் குவிக்கையில், இன்னொன்று மரணத்தையும் அழிவையும் நாடகத்துவப் படுத்துவதாகக் காணப்படுகிறது.*

*இந்த நேரெதிர்த் தன்மையானது கிறிஸ்தவர்களுக்கு வினோதமானதாகத் தோன்றலாம்; மனந்திரும்புவதற்கு இனியும் வாய்ப்புப் பெற்றிராமல் இருக்கும் வகையில் பாவிகள் மரணம் அடைவதைக் காட்டிலும், மனம்திரும்புகின்ற ஒரு பாவியைக் குறித்து அதிகமாக அகம்மகிழுவதற்கு நாம் மிகவும் பழக்கப்பட்டிருக்கின்றோம் (லூக்கா 15:7, 10). வேதாகமத்தை விமர்சிப்பவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, பாபிலோனின் அழிவுக்காகத் தேவனைத் துதித்தல் பற்றி*

ஏராளமாய் (எதிர்ப்பான கருத்துக்களை) கூறுகின்றனர். நியாயத்தீர்ப்புப் பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள வலியுறுத்தத்தைச் சுற்றியிருக்கும் முரண்பாடு பற்றி நாம் கலந்துரையாடியிருக்கின்றோம்,[16] ஆனால் இந்த இடத்தில் கூடுதலான விளக்கங்கள் அவசியமாய் இருக்கின்றன.

முதலில் நாம், வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6 போன்ற வசனப்பகுதிகளுக்குத் தூண்டுதலாய் உள்ள மேலோங்குதல் பெற்ற சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒரு சமையலறை மேஜையைச் சுற்றி அமர்ந்து, காஃபி குடித்துக்கொண்டு, குடிமை அரசுடன் கிறிஸ்தவர்களுக்கு உள்ள உறவுமுறை அல்லது தனிப்பட்ட பழிவாங்குதல் எதிர் தேவனுடைய பழிவாங்குதல் போன்ற கருத்துக்களை அமைதியாகக் கலந்துரையாடிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் உயிர்வாழ்விற்குப் போராடிக்கொண்டிருந்தனர். அவர்களின் வாழ்வு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தது.

> அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழந்திருந்தனர், அந்த உறுப்பினர்கள் கொலோசியத்தில் சிங்கங்களுக்கு இரையாக்கப் பட்டிருந்தனர், இரவு வேளையில் ரோமாபுரியின் வானத்தை வெளிச்ச மூட்டத் தொழுமரங்களில் கட்டிவைத்து எரிக்கப்பட்டிருந்தனர், கிறிஸ்தவர்களைச் சித்திரவதை செய்தவர்கள் காட்டு மிருகங்களின் தோலை அவர்களுக்குப் போர்த்திவிட்டபோது, மூர்க்கமான வேட்டை நாய்களின் கும்பலினால் அவர்கள் வேட்டையாடப் பட்டிருந்தனர்.[17]

அவர்களின் ஆத்துமாக்கள் மறு உறுதிப்பாட்டை எதிர்ப்பார்த்துக் கதறின - வெளிப்படுத்தின விசேஷம் அதையே அவர்களுக்குக் கொடுத்தது.

பித்தம்பிடித்த, காயப்பட்ட மிருகம் ஒன்று இருண்ட காட்டில் உங்களைத் துரத்துவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் இருளினூடே வேகமாய் ஓடுகின்றீர்கள், உங்கள் இருதயம் வேகமாக அடித்துக்கொள்கிறது, கிளைகள் உங்கள் முகத்தில் மோதுகின்றன. இந்த வேளை முழுவதிலும் இரத்தத் தாகம் கொண்ட அந்த உயிரினம்(மிருகம்) உங்களை நெருங்கி நெருங்கி வருவதை உங்களால் கேட்டுணர முடிகிறது. விழுந்து கிடக்கும் கிளையொன்றின்மீது நீங்கள் தடுமாறி விழுந்து, தரையின்மீது கைகால்களைப் பரப்பிக்கொண்டு விழுகின்றீர்கள். மிருகத்தின் கண்கள் இருளில் ஒளிர்வதை உங்களால் காணமுடிகிறது. அது பதுங்கிப் பாய்கிறது. நீங்கள் உங்கள் கண்களை மூடிக்கொண்டு, அதன் பயங்கரமான கடிக்கும் பற்கள் உங்கள் சதையைக் கிழித்துப்போடு வதற்காகக் காத்திருக்கின்றீர்கள். திடீரென்று காட்டினூடே ஒரு துப்பாக்கிச் சத்தம் ஒலிக்கிறது - அந்த விலங்கு உங்கள் காலடியில் செத்து விழுகிறது. உங்களுக்கு இது நடந்தால் நீங்கள் அகம்மகிழ மாட்டீர்களா? உங்களைக் காப்பாற்ற வந்தவரை நீங்கள் துதிக்கவும்மாட்டீர்களா?

ஆகையால், 19ம் அதிகாரத்தின் அகம்மகிழ்ச்சி இயல்பானது என்று முதலில் நான் கருத்துத் தெரிவிப்பேன். பகட்டுக்கார வேசியால்

தூண்டிவிடப்பட்ட 13ம் அதிகாரத்தின் பயங்கரம் நிறைந்த மிருகம், கிறிஸ்தவர்களை விரட்டித் தொடர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் தங்களின் அழிவுக்கென்று ஒப்புக்கொடுத்தவர்களின் உடனடியான அழிவு பற்றி அறிந்தபோது அதனால் அகம்மகிழாதிருந்தால், அவர்கள் மனிதத்தன்மையில் குறைவுபட்டிருப்பார்கள்.

இருப்பினும் நாம் இன்னும் ஆழமாய் ஊடுருவ வேண்டிள்ளது. இவ்வசனப்பகுதியானது மற்றவர்களுடைய துரதிர்ஷ்டத்தில் சிறுபிள்ளைத்தனமாகக் கும்மாளமிடும் செயலை ஊக்குவிப்பதில்லை என்பதை நாம் வலியுறுத்தியாக வேண்டும். 19ம் அதிகாரத்தில் ''அல்லேலூயா!'' பல்லவியானது ''பழிவாங்குதலை அல்ல ... ஆனால் பிரதிபலனைக் குறிப்பிடுகிறது.''[18] பழிவாங்குதல் என்பதல்ல ஆனால் நியாயப்படுத்துதல் [vindication[19]] என்பதே இதன் முக்கிய ஆய்வுக்கருத்தாக உள்ளது.

பழிதீர்த்துக் கொள்ளுதல்/சரிக்குச் சரிக்கட்டுதல் என்பது கிறிஸ்தவர்களின் வேலையல்ல என்று புதிய ஏற்பாடு தெளிவாக எடுத்து ரைக்கிறது. நாம் நமது விரோதிகளை அன்புகூர்ந்து நம்மைத் துன்பப்படுத்து கின்றவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 5:44). பவுல், "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ..."; "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள் ..." என்று கட்டளையிட்டார் (ரோமர் 12:14, 17அ). இருப்பினும், தனிப்பட்ட பழிவாங்குதலைக் கடிந்து கொள்ளும் ரோமர் 12ம் அதிகாரமானது, அதே வேளையில் தெய்வீகப்பழிவாங்குதலை அறிவிக்கிறது: "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிற படியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (வசனம் 19).

''தெய்வீகப் பழிவாங்குதல் என்ற ஆய்வுக்கருத்து ... வேதாகமம் முழுவதிலும் முறிவற்ற வகையில் தொடர்ந்து காணப்படுகிறது.''[20] பழிவாங்குதல் என்பது தேவனுடைய தனிச்சிறந்த உரிமையென்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.[21] தேவனுடைய மக்களுக்கு, நீண்டகாலத்திற்கு முன்பாகவே, ஒரு வாக்குத்தத்தம் ஏற்படுத்தப் பட்டிருந்தது: ''... களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்கு பதிலளித்து, ..." (உபாகமம் 32:43). தேவன் தமது வாக்குத்தத்தத்தை இன்னமும் காத்துக் கொண்டிருந்ததைக் கண்டதென்பது தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு மனஎழுச்சி ஊட்டுவதாக இருந்திருக்க வேண்டும். இது நிச்சயமாகவே அவர்கள் அகம்மகிழ்வதற்கு மிகுதியான காரணத்தை அளித்தது.

இந்தச் சிந்தனையை நாம் இன்னும் ஓரடி முன்னதாக எடுத்துச் செல்வோம்: பழிவாங்குதல் என்பது அல்ல, ஆனால் நியாயப்படுத்துதல் என்பதே வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6ன் ஆய்வுக்கருத்தாகும் என்று நான் சற்று நேரத்திற்கு முன்பாகக் கூறினேன். நான் குறிப்பிடும் நியாயப் படுத்துதல் என்பது கிறிஸ்தவர்களின் நியாயப்படுத்துதல் என்பதை உள்ளடக்கியிருக்கிறது: குற்றவாளிகள் என்று கூறி அவர்களை ரோமாபுரி

*கொலை செய்திருந்தது, ஆனால், தேவன் அவர்களைப் பரிசுத்தவான்களாக எழுப்பியிருந்தார். இருப்பினும், தேவனுடைய நியாயப்படுத்துதலும், அவரது திட்டங்களும் நோக்கங்களுமே மிக முக்கியமானவைகளாக இருந்தன.*

*யுத்தம் என்பது உண்மையில் தேவனுக்கும் பிசாசானவனுக்கும் இடையில்தான் உள்ளது என்று வெளிப்படுத்தின விசேஷம் 12ல் நாம் கண்டோம். துன்மார்க்கம் கண்டுகொள்ளாமல் விடப்பட்டால் என்னவாகும்? பாவத்தைத் தேவன் தண்டிக்காமல் விட்டுவிட்டால் என்னவாகும்? அது, துன்மார்க்கம் வெற்றிகொண்டது போன்று தோன்றாதா? "மனிதரைப் பற்றிய விஷயங்களில் தேவனின் ஆளுகையா அல்லது சாத்தானின் வஞ்சிக்கும் வல்லமையா, எது வெற்றியடைய வேண்டும்'' என்ற கேள்வியே வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6க்கு பின்னணியாக உள்ளது.*[22]

*யாரேனும் ஒருவர், "ஆனால் தேவனுடைய சித்தத்திற்குத் தொடர்ந்து ஓய்வின்றிக் கீழ்ப்படியாமல் இருக்கின்ற பாவிகளிடத்திலும் அவர் இரக்கம் நிறைந்தவராய் இருக்கவேண்டும்'' என்று கூறி மறுப்பு உரைக்கலாம். வெளிப்படையான கீழ்ப்படிதலைத் தேவன் தண்டியாது அனுமதித்து விடுவாரென்றால், தேவன் இரக்கம் நிறைந்தவர் என்பதல்ல ஆனால் தேவன் உதாசீனம் செய்கின்றவர் என்பதே செய்தியாயிருக்கும் - அதாவது, மனிதன் பாவம் செய்வதைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை என்றாகிவிடும். இப்போது நாம் பார்த்துக்கொண்டு இருக்கும் விஷயத்தில், தேவன் விக்கிரக ஆராதனையைக் குறித்து உதாசீனமாய் இருக்கின்றார், சர்வாதிகாரத்தைக் குறித்து உதாசீனமாய் இருக்கின்றார், தமது மக்களின் துன்பம் குறித்துக்கூட உதாசீனமாய் இருக்கின்றார் என்று இது அறிவிக்கும். ஆல்பெர்ட் பால் டிங்கர் என்பவர் பின்வருமாறு கூறினார்,*

> *... தனிநபர்கள் அல்லது முழு சமூகங்கள் ஆகியவற்றின் பெருந்துன்பம் அல்லது மகிழ்வு ஆகியவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியமான விஷயங்கள் உள்ளன.*
>
> *... நித்திய நீதிக்கு எதிரான கலகத்தின் குற்றம் நிறைந்த பாதையில் அறைகூவலற்ற நிலையில் மனிதர்கள் பயணம் சென்று, கணக்கு ஒப்புவிக்கும்படி ஒருபோதும் அழைக்கப்படாதிருத்தல் என்பது மிகவும் பயம் நிறைந்த விஷயமாய் இருக்கும்.*[23]

*ரே சம்மர்ஸ் என்பவர் வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6ஐப் பற்றிப் பின்வருமாறு முடிவுசெய்தார், "இது நீதி மற்றும் சத்தியம் ஆகியவற்றின் வெற்றியின் மீதான அகமகிழ்வின் பாடலாக இருப்பதைப் பார்க்கிலும் அதிகமாக ரோமாபுரியின்மீது விழுந்த துன்மார்க்கத்தின் மீதான அகமகிழ்வின் பாடலாக இருப்பதில்லை.''*[24] *பின்வரும் சிந்தனையை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: இவ்வசனப்பகுதியானது, வெறுப்பின் கீதமாக இராமல், துதியின் கவிதையாக உள்ளது.*

*அந்தத் துதி, 4ம் வசனத்தில் தொடருகிறது: ''இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து, ஆமென்,*

அல்லேலூயா, என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொண்டார்கள்.''

நாம், 4ம் அதிகாரத்தின் அரியணைக் காட்சியில், இருபத்துநான்கு மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் முதன்முதலாக சந்தித்தோம்.[25] இருபத்துநான்கு மூப்பர்களும், ஜெயங்கொண்டிருந்த கிறிஸ்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தினர் என்று நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம். நான்கு ஜீவன்கள் என்பவை, படைப்பு முழுவதையும் அடையாளப் படுத்துகின்ற அல்லது தேவனுடைய பண்பில் பரலோகத்தில் எஞ்சியுள்ள வற்றின் நினைவூட்டுதல்களாகவும் மாத்திரம் உள்ள, விசேஷித்த முறைமையைச் சேர்ந்த தூதர்களாய் இருக்கலாம். அவர்கள் தங்கியிருந்து வழிபடும் சமூகமாய் இருந்தனர் என்பதே அவ்விரு குழுக்களின் மிக முக்கியமான பண்பாக இருந்தது (5:8, 14; 7:11). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அவர்களின் கடைசித் தோற்றமாகிய இதில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாக மீண்டும் ஒருமுறை பணிந்து கொண்டனர். பரலோக பாடல் குழுவினர் கூறியிருந்த பல்லவியுடன் அவர்கள் தங்களின் "ஆமென்"[26] என்பதைக் கூட்டினர், "அல்லேலூயா!" என்று உரக்கக்கூவினர். தேவன் செய்துள்ளவற்றிற்காக அவரை அவர்கள் துதித்தனர்.

## அவர் யாராக இருக்கின்றார் என்பதற்காக தேவனைத் துதித்தல் (19:5, 6)

தேவன் *செய்துள்ளவற்றிற்காக* அவரைத் துதித்த துதியில், தேவனு டைய பண்பிற்காக அவரைத் துதித்தலும் பொதியப்பட்டுள்ளது: அவர் நமக்கு, மகிமையான மற்றும் வல்லமை நிறைந்த இரட்சகராக இருக்கின்றார் என்று 1ம் வசனம் மறைமுகமாய் உணர்த்துகிறது, அவர் நியாயமும், சத்தியமும் நீதியும் உடையவராய் இருக்கின்றார் என்று 2ம் வசனம் சுட்டிக்காண்பிக்கிறது. இருப்பினும் 5ம் வசனத்தில் இருந்து, இந்தப் பாடலானது தேவன் யாராக இருக்கின்றார் என்பதற்காக அவரைத் துதிப்பதில் கவனம் குவிக்கிறது.

"... ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது" (வசனம் 5ஆ). இது அநேகமாக, "அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும்'' இருந்த (4:6) நான்கு ஜீவன்களில் ஒன்றினுடைய குரலாயிருக்கலாம்.[27] அந்தக் குரல், "நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்''[28] என்று கூறிற்று (வசனம் 5அ). ''ஊழியக்காரர்'' என்பது ''கிறிஸ்தவர்கள்'' (1:1) என்று கூறுவதற்கான இன்னொரு வழிமுறையாக இருந்தது. இது கர்த்தருக்கு நாம் பட்டுள்ள கடனை வலியுறுத்துகிறது. ''பயப்படுகிற'' என்ற வார்த்தையானது, இந்தத்தனிநபர்கள், பயபக்தி மற்றும் மரியாதை ஆகியவற்றின் மூலமாக தங்கள் வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புவித்திருந்தனர் என்பதை வலியுறுத்திற்று (பிரசங்கி 12:13). "சிறியோரும் பெரியோரும்" என்ற சொற்றொடர், ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனைத் துதிக்க வேண்டும் என்ற சிந்தனையை

அடிக்கோடிடுகிறது; "இனம், வகுப்பு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் இருந்த எல்லா மாறுபாடுகளும் கடந்தகாலத்தில் இருந்தவையாக உள்ளன."[29]

அந்தக் குரலுக்குப் பதில்செயலாக யோவான் உடனே, "திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தை" கேட்டார் (வசனம் 6அ). இதேபோன்ற சொற்றொடர்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் இதற்கு முன்பு பயன்படுத்தப்பட்டுள்ளன (1:15; 14:2), இவை பின்தொடரும் பாடலின் வல்லமையையும் மாட்சிமையையும் வலியுறுத்துகின்றன.

திரளான கூட்டத்தார், "அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்" என்று பாடினர் (வசனம் 6ஆ). பாடலின் இந்தப் பகுதி குறுகியதாக உள்ளது, ஆனால் இது வல்லமை - பொதிந்ததாக உள்ளது: "கர்த்தர்" என்ற வார்த்தை "எஜமானர்" அல்லது "ஆட்சியாளர்" என்று அர்த்தப்படுகிறது. "சர்வவல்லமையுள்ளவர்" என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனைப் பற்றிய தனிச்சிறந்த விவரிப்பாக உள்ளது.[30] இவ்வார்த்தை, "எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.[31] "ராஜ்யபாரம் பண்ணுகிறுர்" என்ற சொற்றொடர்கூட தனிச்சிறப்பானதாக உள்ளது. பூமிக்குரிய கண்ணோக்கில் இருந்து காணுகையில், பேரரசன் கட்டுப்பாடு செலுத்துவதுபோல் காணப்பட்டது, ஆனால் அது ஒரு மாயையான தோற்றமாகவே இருந்தது. தேவன்தாம் ஆட்சிசெய்பவராக இருந்தார் (இருக்கின்றார்).

"ராஜ்யபாரம் பண்ணுகிறார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது, மூலவசனத்தில், கடந்தகால வினைச்சொல்லில் உள்ளது; எனவே, "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணினார்" என்பதே நேரடி அர்த்தமான மொழிபெயர்ப்பாக இருக்கும். திரளான கூட்டமானது (தங்கள்) நிகழ்கால வெற்றியொன்றைக் கொண்டாடிக் கொண்டிருந்தபடியால், பெரும்பான்மையான மொழிபெயர்ப்புக்கள் இவ்வார்த்தையை நிகழ்கால வினைச்சொல்லில் ("ராஜ்யபாரம் பண்ணுகிறார்") இட்டுள்ளன; ஆனால் இந்த மொழி பெயர்ப்புகளில் இருந்து நீங்கள், தேவன் தாம் ரோமாபுரியை வெற்றி கொள்வதற்கு முன்பு ஆளுகை செய்திருந்தது இல்லை என்று முடிவு செய்துவிடவேண்டாம்.[32] தேவன் எப்போதுமே ஆளுகை செய்து கொண்டிருக்கின்றார். மோசே, "கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரிகம் பண்ணுவார்" என்று பாடினார் (யாத்திராகமம் 15:18). தாவீது, "கர்த்தர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார்" என்று கூறினார் (சங்கீதம் 29:10). அரசரிடத்தில் தானியேல், "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து ..." என்று கூறினார் (தானியேல் 4:25) தேவன் ஆளுகை செய்திருந்தார், ஆளுகை செய்துகொண்டிருந்தார் மற்றும் எப்போதும் ஆளுகை செய்வார் என்பதே 6ம் வசனத்தின் செய்தியாக உள்ளது.

இந்த சத்தியம், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கையைக்

*கொடுத்தது. சோதனைகளின் மத்தியில், அவர்கள் மேன்மையான ஒரு நாளைய தினத்தை நம்பியிருக்க முடியும்:*

> *கறுமேகங்கள் ஏற்கனவே உதயத்தின் இளஞ்சிவப்பு விரல்களினால் கீறப்பட்டிருந்தன. பாலைவனத்தில் [அவர்கள்] ஏராளமான மழையின் இரைச்சலைக் கேட்க முடிந்தது. உற்சாகமற்ற குளிர்காலத்தின்மீது ஏற்கனவே வசந்தகாலத்தின் மகிழ்ச்சிபொங்கும் குரல்கள் பொழியப்பட்டிருந்தன. [அவர்கள்] எதிர்ப்பார்ப்பின் குதிமுனையில் நின்றனர் ... .*[33]

*அவர்கள் எதன் அடிப்படையில் தங்கள் நம்பிக்கையை வைத்திருந்தனர்? “எந்த ஒரு மக்களினத்தின் மீதான வெற்றியின்மீதோ” அல்லது “எந்த ஒரு அரசியல் ரீதியான அல்லது பொருளாதார ரீதியான திட்டத்தின் வெற்றியின்மீதோ” அல்ல, மாறாக அவர்கள், “தேவனுடைய முழுமையான அரசத்துவத்தின்” அடிப்படையில் தங்கள் நம்பிக்கையை வைத்திருந்தனர்.*[34]

*முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, தேவன் ஆளுகை செய்கின்றார் என்பதை நினைவூட்டுவது அவசியமாய் இருந்தது. நமக்கும் அது அவசியமாய் இருக்கிறது. என்ன நடந்தாலும், கிறிஸ்தவர்கள் எப்போதும், “தேவன் ஆளுகை செய்கின்றார்!” என்று உரத்துக் கூறமுடியும்.*

*சில வேளைகளில் மக்கள், “தேவன் ஆளுகை செய்கின்றார் என்றால், உலகத்தில் பிரச்சனைகள் இருப்பது ஏன்?” என்று வியப்படைகின்றனர்.*[35] *கர்த்தர் “மனிதரின் சுயாதீன நிலையுடன் சீர்பொருந்திய ஒரு வகையில் ஆளுகை செய்கின்றார்'' என்று, குளோவிஸ் சேப்பல் என்பவர் உற்றுநோக்கியுள்ளார்:*[36] *(1) நாம் பாவம் செய்ய சுயாதீனமுள்ளவர்களாய் இருக்கையில், நமது பாவத்தோடு தப்பித்துப் போய்விடமுடியாத நிலையில் இருக்கின்றோம் என்ற நிலையில் ஆளுகைசெய்கின்றார். (2) அவர், தீமையைத் தடைசெய்யாதிருப்பினும், ஒருபோதும் அதினால் (தீமையினால்) வெல்லப்படாதவராய் இருக்கும் நிலையில் ஆளுகை செய்கின்றார். (3) அவர், தம்மீது அன்புகூர்ந்து தமக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு, ஒவ்வொரு நன்மையும் மாபெரும் நன்மையாகவும், ஒவ்வொரு இழப்பும் ஆதாயமாகவும் ஆகும்படிக்கு ஆளுகை செய்கின்றார். (4) அவர், முடிவில் “எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக” (எபிரெயர் 2:2;* KJV) *ஆளுகை செய்கின்றார்.*

*அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் என்பவர் 1865ல் கொலைசெய்யப்பட்டபோது, “லிங்கன் இறந்துபோனார், நமது நம்பிக்கை ஒழிந்துபோயிற்று!'' என்று பலர் கூறினர். சுவிசேஷப் பிரசங்கியாரும் குடிமை யுத்தத்தின்போது,*[37] *சுவிசேஷ ஊழியரும் மற்றும் படைத்தலைவருமான ஜேம்ஸ்* A. *கேர்ஃபீல்டு என்பவர் அவ்வேளையில் நியூயார்க்கில் இருந்தார். சென்ட்ரல் பார்க் என்ற இடத்தில் துக்கம் கொண்டாடிய ஒரு குழுவின் மத்தியில் எழும்பி நின்ற அவர், அமெரிக்காவுக்கு நேர்ந்த இழப்பை ஒப்புக்கொண்டார், ஆனால் அதன்பின்பு அவர், “சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன் இன்னமும் ஆளுகை செய்கின்றார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!''*[38] *என்று கூறினார். நாட்கள்*

*நல்லவையாக இருந்தாலும் இல்லையென்றாலும், நாம் அந்த சத்தியத்தை ஒருக்காலும் மறவாதிருப்போமாக!*

*அல்லேலூயா! அல்லேலூயா! ...*
*சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன் ஆளுகின்றார்*
*.................................................................................*
*அவர் என்றென்றைக்கும், என்றென்றைக்கும்,*
*என்றென்றைக்கும் ஆளுவார்!*
*ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா!*
*ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா!*
*அவர் என்றென்றைக்கும், என்றென்றைக்கும், என்றென்றைக்கும்,*
*என்றென்றைக்கும், என்றென்றைக்கும் ஆளுவார்.*
*அல்லேலூயா! ...*[39]

*தேவன் யாராக இருக்கின்றார் என்பதற்காக நாம் அவரைத் தொடர்ந்து துதிப்போம்.*

## முடிவுரை

*ஹேன்டெல் என்பவரின் மேசியா என்ற பாடல் முதன்முதலாக இலண்டன் நகரில் 1743ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ம் தேதி பாடப்பட்டபோது, இங்கிலாந்தின் அரசர் அங்கிருந்தார். "சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவன் ஆளுகின்றார்" என்ற பல்லவி பாடப்பட்ட போது அதைக் கேட்டவர்கள் இருதயத்தின் ஆழத்தில் உணர்ச்சிவசத்தால் தூண்டப்பட்டனர், அரசர் உட்பட அங்கிருந்த யாவரும் துள்ளி எழும்பி நின்றனர். இவ்விதமாக, மேசியா என்ற பாடல் எங்கெல்லாம் எப்போதெல்லாம் பாடப்பட்டதோ, அப்போதெல்லாம் "அல்லேலூயா பல்லவி"யின்போது யாவரும் எழுந்து நிற்கும் பாரம்பரியம் தொடங்கிற்று.*[40]

*வெளிப்படுத்தின விசேஷத்தின் "அல்லேலூயா!" பல்லவி வாசிக்கப்படும்போது நீங்கள் உடல்ரீதியாக எழுந்து நிற்கின்றீர்களா இல்லையா என்பது பொருட்படுத்தப்பட வேண்டியதாக இருப்பதில்லை. இருப்பினும், ஆவிக்குரிய வகையில் நீங்கள் பயபக்தியிலும் துதியிலும் பதில்செயல் செய்ய வேண்டியது முக்கியமானதாக உள்ளது. சர்வவல்லவர் வானத்திலும் பூமியிலும் ஆளுகை செய்கின்றார் என்று ஆவியானவர் அறிவிக்கின்றார், ஆனால் இது இன்னமும் பற்றியெரியும் ஒரு கேள்வியை விட்டுச் செல்கிறது: அவர் உங்கள் இருதயத்திலும் உங்கள் வாழ்விலும் இராஜாவாக ஆளுகை செய்கின்றாரா?*[41]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்துடன் தொடர்புள்ள வகையில், நீங்கள் அனேகமாக, பெரும்பான்மையான பாடல் புத்தகங்களில் காணப்படும் மாபெரும்*

“அல்லேலூயா” பாடல்கள் சிலவற்றைப் பாட விரும்பலாம்.

இந்தப்பாடம் ஒரு சில தழுவல்களுடன் தனியே நிற்கும் பிரசங்கமாகப் பயன்படுத்தப்படலாம்: முதல் பிரதானக் கருத்தின்கீழ், நாம் தேவனைத் துதிக்கக்கூடும்படி அவர் செய்துள்ள சில விஷயங்கள் பற்றிய கலந்துரையாடலுடன் தொடங்குங்கள். பின்பு, அவரது நியாயத் தீர்ப்புக்காக அவரைத் துதிக்கும் இவ்வசனப்பகுதியை - மற்றும், நாம் ஏன் அதற்காக அவரைத் துதிக்கவேண்டும் என்பதை - குறிப்பிடுங்கள். இரண்டாம் பிரதானக்கருத்தின்கீழ், முதலில் தேவனைத் துதிப்பதற்குப் பாத்திரமாக அவரிடத்தில் உள்ள சில பண்புகளைப் பற்றிப் பொதுவான வழியில் கலந்துரையாடுங்கள். பின்பு வசனப்பகுதியின் மீது கவனம்குவித்து, அவரது சர்வவல்லமையும் ஆளுகையும் அவரது பண்பின் அத்தியாவசியப் பாகமாயிருப்பது ஏன் என்பதை விளக்கப்படுத்துங்கள்.

---

குறிப்புகள்

[1]ஜார்ஜ் எஃப். ஹேன்டெல் என்பவர் 1685ல் ஜெர்மனியில் பிறந்தார், 1759ல் இலண்டனில் இறந்தார், இவர் தமது காலத்தில் மாபெரும் இசையமைப்பாளராயிருந்தார். இவர் எல்லாக் காலங்களிலும் மிகவும் பரவலாக பாடிப்பரவசப்படுத்தப்பட்ட *மேசியா* என்ற பாடலை இயற்றி இசையமைத்ததைக் கொண்டு நன்கு அறியப்பட்டுள்ளார். [2]Paul Lee Tan, *Encyclopedia of 7700 Illustrations* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 326. [3]ஹேன்டெல், 11:15ல் உள்ள பின்வரும் சொற்றொடரையும் கடன் பெற்றிருப்பார் என்பது உறுதி: “அவர் சதாகாலங்களிலும் இராஜ்யபாரம் பண்ணுவார்.” [4]KJV வேதாகமத்தில், இதை உச்சரிப்பதற்கு இன்னொரு வழிமுறையாக, கிரேக்க ஒலிபெயர்ப்பான “Alleluia” என்றுள்ளது. [5]மூல எபிரெய வசனத்தில் உயிரெழுத்துக்கள் இல்லாததாலும், தேவனுடைய நாமத்தை வீணாக உச்சரித்து விடுவோமோ என்று பயந்ததால் இஸ்ரவேலர்கள் தேவனுடைய பரிசுத்த நாமத்தைப் பயன்படுத்தாததாலும், “யெகோவா” என்ற பெயரின் மிகச்சரியான எழுத்துக்களையோ உச்சரிப்பையோ நாம் நிச்சயமாய் அறியமுடிவதில்லை. “Yahweh” என்பது உள்ளிட்ட பிற எழுத்துக்கள் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிச்சயமற்ற தன்மையினால், பல மொழிபெயர்ப்புகள், “யெகோவா” என்பதற்குப் பதிலாக “LORD” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர் [தமிழில் இது “கர்த்தர்” என்று அழுத்தமான எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது]. [6]எடுத்துக்காட்டாக, சங்கீதம் 106, 111-113, 115-118, 135, 146-150 ஆகியவற்றைக் காணவும். [7]மரணத்தின்மீது ஜெயங்கொண்டுள்ள கிறிஸ்தவர்கள், இருபத்திநான்கு மூப்பர்களால் குறிப்பிடப்படலாம் என்பதால் (இவ்வசனத்தின்மீது பின்வரும் விளக்கவுரையைக் காணவும்), இவ்விடத்தில் உள்ள திரளான ஜனகூட்டம் என்பது தனிப்பட்ட வகையில் தூதர்களாகவே இருந்தது என்று சிலர் நம்புகின்றனர். [8]“இரட்சணியம்” என்ற வார்த்தை இவ்விடத்தில் அனேகமாக ஒரு விரிவான கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஃபிராங்க் பேக் என்பவர், “இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரட்சணியம் என்பது கடந்த காலத்துப் பாவங்களில் இருந்து விடுவிக்கப்படுதல் என்பதாக மாத்திரமின்றி, கிறிஸ்தவர்கள் நிறைவான வெற்றிக்கு வரும்வரைக்கும் அவர்களை ஒவ்வொரு சோதனை மற்றும் துன்புறுத்தப்படுதல் ஆகியவற்றில் இருந்து இரட்சித்தலையும் குறிக்கிறது” என்று எழுதினார் (*Revelation,*

Part 2, The Living Word Series [Austin, Tex.: R. B. Sweet Co., 1965], 40). J. W. இராபர்ட்ஸ் என்பவர் இதன் அர்த்தத்தை இன்னும் விரிவாக்கிப் பின்வருமாறு எழுதினார்: "இரட்சணியம் என்பது நித்திய இராஜ்யத்திற்குள் பரிசுத்தவான்களை விடுவித்து அழைத்தல் என்று மாத்திரமின்றி (2 தீமோத்தேயு 4:18), தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுதல் என்பதாகவும் உள்ளது" (*The Revelation to John* [*The Apocalypse*], The Living Word Commentary Series [Austin, Tex.: Sweet Publishing Co., 1974], 157). [9]வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், இந்தப் பண்புகள் தேவனுக்கு இதற்கு முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளன. (4:11; 5:12; 7:10, 12; 12:10 ஆகிய வசனங்களைக் காணவும்.) இம்மூன்று பண்புகளுக்கும் வலியுறுத்தம் அளிப்பதற்காக, கிரேக்க வசனத்தில் இவைகள் ஒவ்வொன்றிற்கு முன்பாகவும் "the" என்ற சுட்டுச் சொல் உள்ளது. [10]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 169.

[11]15:3; 16:7 ஆகிய வசனங்களைக் காணவும். [12]Barclay, 169. [13]"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில், "பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது" என்ற பாடத்தில் காணப்படும் விளக்கங்களைக் காணவும். [14]புகையானது "சதாகாலங்களிலும்" எழும்பும் என்ற அடையாளத்துவமானது, அதன் வீழ்ச்சி நிரந்தரமானதாக இருக்கும் என்ற சிந்தனைக்கு மறுவலியூட்டுகிறது (18:21-23ஐக் காணவும்). இந்தச் சொற்றொடராக்கத்தை ஏசாயா 34:9, 10உடன் ஒப்பிடவும்; யூதா 7ஐக் காணவும். [15]Owen, L. Crouch, *Expository Preaching and Teaching: Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 344. [16]எடுத்துக்காட்டாக, "வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் "வானத்தின் மத்தியிலே பிரசங்கமேடை" என்ற பாடத்தில் 14:10, 11ன் மீதான குறிப்புகளைக் காணவும். [17]W. B. West Jr., *Revelation Through First-Century Glasses*, ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 119. [18]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 211. [19]"Vindication": [நியாயப்படுத்துதல்] என்பது "தற்காத்தல்" என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்துள்ளதாயிருக்கிறது. இதை நான், "சரியாயிருப்பதைக் காண்பித்தல்" என்ற கருத்தில் இவ்விடத்தில் பயன்படுத்தியுள்ளேன். கடைசியில், கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் நோக்கமும் சரியாயிருப்பதாகக் காண்பிக்கப்படும். [20]George Eldon Ladd, *A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 238. எரேமியா 50:15, 29; 51:24, 26, 48 ஆகிய வசனங்களைக் காணவும்.

[21]உபாகமம் 32:35; ரோமர் 12:19; 2 தீமோத்தேயு 4:14; எபிரெயர் 10:30; 1 பேதுரு 3:9 ஆகிய வசனங்களைக் காணவும். [22]Ladd, 241. [23]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 107. [24]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 195. [25]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும், "கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்" என்ற பாடத்தில் காணவும். [26]"ஆமென்" என்பது இருதயப்பூர்வமாக அங்கீகரித்தலைக் குறிக்கிறது. "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும், "தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 1" என்ற பாடத்தில் "ஆமென்" என்ற வார்த்தைக்கான குறிப்புகளைக் காணவும். [27]அந்தக் குரலானது, "நமது தேவனுடைய ... துதியுங்கள்" என்று கூறியது என்பதால், அது அனேகமாகத் தேவனுடைய குரலாய் இருந்திராது; அது "நம் தேவன்" என்று பொதுவாகக் கூறியிராத இயேசுவின் குரலாக இருந்திருக்கவும் வாய்ப்பில்லை (யோவான் 20:17ஐக் காணவும்). [28]இந்தச் சொற்றொடராக்கத்தை சங்கீதம் 135:1, 20ஆ ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [29]Philip E. Hughes, *The Book of the Rev-*

*elation: A Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 197. [30]"*சர்வ வல்லவர்" என்ற வார்த்தையானது வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒன்பது முறையும் புதிய ஏற்பாட்டில் வேறு ஒரே ஒரு முறையும் மாத்திரம் காணப்படுகிறது. இது ஹேன்டெல் என்பவரின் பல்லவியில் பயன்படுத்தப்பட்ட* "omnipotent" *என்ற இலத்தீன் வார்த்தைக்குரிய வகையிலேயே அர்த்தப்படுகிறது.*

[31]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 339. [32]*"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "கடைசி எக்காளம்" என்ற பாடத்தில், 11:17 பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [33]Clovis G. Chappell, *Sermons From Revelation* (New York: Abingdon Press, 1943), 192. [34]Ibid., 193. [35]*''வெளிப்படுத்தின விசேஷம், 1'' என்ற புத்தகத்தில் ''ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் இந்த கேள்வி பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [36]Ibid., 197. *பின்தொடரும் முதல் மூன்று கருத்துக்கள்* Chappell, 197-98 *என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளன. நான்காவது கருத்து [என்னால்] கூட்டப்பட்டுள்ளது.* [37]*பிற்காலத்தில் [1881ல்] கேர்ஃபீல்டு அமெரிக்காவின் இருபதாவது ஜனாதிபதியானார்.* [38]*இந்தக் கதை* West, 128 *என்ற புத்தகத்தில் காணப்படுகிறது.* [39]George F. Handel, "Hallelujah Chorus," *Songs of Faith and Praise*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996). [40]*இந்தக் கதையானது* Tan, 480 *என்ற புத்தகத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.*

[41]*இது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், மக்கள் தேவன் மீதுள்ள நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் அவருக்குக் கீழ்ப்படிவதன்மூலம் அவரைத் "தங்கள் வாழ்வில் அரசராக'' ஏற்படுத்தும்படி அவர்களை நீங்கள் உற்சாகப்படுத்த விரும்புவீர்கள். இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "தராசில் நிறுக்கப்பட்டது" என்ற பாடத்தின் கடைசி அடிக்குறிப்பையும், "என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்'' என்ற பாடத்தின் முடிவுரையையும் மறுபடியும் கண்ணோக்கவும்.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *ஹேன்டெல் என்பவரின் ''அல்லேலூயா பல்லவியின்'' வார்த்தைகளை வெளிப்படுத்தின விசேஷம் 19:1-6, 16; 11:15ன் அல்லேலூயா பல்லவியுடன் ஒப்பிடவும்.*
2. *"அல்லேலூயா" என்ற வார்த்தை நேரடியாக அர்த்தப்படுத்துவது என்ன? இவ்வார்த்தையானது தேவனுடைய பரிசுத்த நாமத்தைக் கொண்டுள்ளபடியால், இது சாதாரணமாக அல்லது மரியாதைக் குறைவாகப் பயன்படுத்த வேண்டிய வார்த்தையாக உள்ளதா?*
3. *(இந்தப் பாடத்தின்படி) நாம் தேவனை எந்த இரண்டு விஷயங்களுக்காகத் துதிக்க வேண்டும்? இவ்விரண்டு ஆய்வுக் கருத்துக்களுக்கான உதாரணங்களைக் கண்டறிவதற்கு, சில சங்கீதங்களை - அல்லது பாடல் புத்தகத்தில் உள்ள சில பாடல்களை - கண்ணோக்கவும்.*
4. *ரோமாபுரியின் வீழ்ச்சி குறித்து அகம் மகிழும்படிக்கு ஆதிக் கிறிஸ்த*

*வர்களுக்குக் கட்டளையிடப்பட்டது ஏன் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?*

5. *துன்மார்க்கம் தண்டிக்கப்பட வேண்டியது அவசியமாயிருப்ப தென்பது ஏன்?*
6. *19ம் அதிகாரத்தில் நாம் இருபத்திநான்கு மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் கடைசி முறையாகச் சந்திக்கின்றோம். இந்த அடையாளங்களை மறுகண்ணோட்டமிடுதல் என்பது தகுதிவாய்ந்ததாக இருக்கலாம். இவைகள் அரியணைக் காட்சியில் எவற்றைக் கூட்டுகின்றன?*
7. *“தேவன் ஆளுகை செய்கின்றார்” என்பதை அறிதல், தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு முக்கியமானதாக இருந்தது? இதை அறிதல், நமக்கு எவ்வளவு முக்கியமானதாக உள்ளது?*
8. *இந்தப் பாடம், தேவன் நமது இருதயங்களில் ஆளுகை செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறது. தேவன் “நமது இருதயங்களில் ஆளுகை செய்தல்” என்பது எதை அர்த்தப் படுத்துகிறது?*